செ.வெ.எண்: 387/2016 நாள்: 21.06.2016

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்த பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மான்யங்களுடன் கூடிய கடனுதவி, ஈடு உத்திரவாத நிதியம் மற்றும் முயற்சி மூலதன நிதியம் போன்ற திட்டங்கள் அரசின் கொள்கையளவில் வடிவு பெற்றுள்ளன. இதன் ஒரு பகுதியாக சிறந்த தொழில் முனைவோர்களை கண்டறிய சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தொழில் மற்றும் வணிகத்துறையின் மாவட்ட தொழில் மையம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்கமும் இணைந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடத்த இருக்கிறது. சுயமாக தொழில் தொடங்க விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட தொழில் மற்றும் சேவைத் தொழில் செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் ஆண் / பெண் அனைவரும் இந்த முகாமில் கலந்துகொள்ளலாம். நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள ரோட்டரி ஹாலில் 02.07.2016 அன்று காலை 09.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடைபெறும்.

முதல் கட்டமாக சொந்தமாக தொழில் தொடங்குவதில் உள்ள நன்மைகள், தொழில் வாய்ப்புகள், தொழிலை தெரிவுசெய்வது எப்படி? தொழில் துவங்கவிருக்கும் முனைவோருக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் மற்றும் திட்டங்கள் ஆகியன பற்றி இம்முகாமில் விவரிக்கப்படும். பயிற்சிமுகாமின் இறுதியில் தொழில் தொடங்க விரும்பும் நபர்களின் பெயர்கள் பெறப்பட்டு அவர்கள் இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அழைக்கப்படுவர்.

இரண்டாம் கட்ட 5-நாள் பயிற்சியில் இந்த தொழில்முனைவோர்களுக்கு தொழில் வணிக வடிவம் மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும்.

(…..த.பி.பா)



தகுதி உள்ளவர்கள் அரசு வழங்கும் மான்ய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதன்மூலம் நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும். இப்பயிற்சிகளில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மாவட்ட தொழில் மையங்களும் இணைந்து செயல்படும். எனவே, அரசு திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் அதன் மூலம் பயன்படும் வழிவகைகளும் ஏற்படுத்தி தரப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம். ஆகையால் மேற்கண்ட பயிற்சியில் பயன்பெற விரும்பும் நபர்கள் தங்களின் முகவரி, கல்வித்தகுதி, மற்றும் தொலைபேசி எண் முதலியனவைகளை பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, கோணம் அஞ்சல், நாகர்கோவில்-4 அவர்களுக்கு 27.06.2016-க்கு முன்னதாக கடிதம் மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை **8754590965** எண்ணிலும் மாவட்ட தொழில மைய பொது மேலாளர் அவர்களை **04652-260008 மற்றும் 9367523037** ஆகிய எண்களிலும் அணுகலாம்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**கன்னியாகுமரிமாவட்டம்**

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**